# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## தேருநர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்)

***1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் குறித்த சில தேவைப்பாடுகளிலிருந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களுக்கு விலக்களிப்பதற்கு விசேட ஏற்பாட்டைச் செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.***

*நீதி அமைச்சர் அவர்களால் 2013, யூன் மாதம் 06 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

---

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ ***246 ஆம் சட்டமூலம்*** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : 5.00**

2-PL 007271 - 350 (2013/05)

ச. வ. ஓ. 32/2013

## 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் குறித்த சில தேவைப்பாடுகளிலிருந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களுக்கு விலக்களிப்பதற்கு விசேட ஏற்பாட்டைச் செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்

*கடந்த அண்மைக்காலத்தின்போது இலங்கையில் நிலவிய ஆயுதந்தாங்கிய மோதல் காரணமாகக் குறித்த சில ஆட்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோராக வந்துள்ளனராதலாலும் :* முன்னுரை.

*அத்துடன் வாக்களிப்பிற்கு தகைமையுடைய மற்றும் அவர்களின் பிள்ளைகள் உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோராக வருவதற்கு முன்னர் அவர்களின் நிரந்தரமான வதிவிடங்கள் எந்தத் தேர்தல் மாவட்டத்தில் அமைந்திருந்தனவோ அந்தத் தேர்தல் மாவட்டத்தில் அவர்கள் தமது வாக்குரிமைக்கான உரிமையைப் பிரயோகிப்பதனை இயலச்செய்வதற்கு அரசானது கொள்கையொன்றை வகுத்தமைத்துள்ளதாதலாலும் :*

*அத்துடன் அத்தகைய கொள்கைக்குப் பயன்கொடுப்பதற்கென விசேட சட்டமாக்கல் ஏற்பாட்டைச் செய்தல் இப்போது அவசியமாக வந்துள்ளதாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

**1.** இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்பலாம். சுருக்கப்பெயர்.

**2.** 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும்,- உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்கள் பதிவு செய்யப்படுவதற்குத் தகவுடையோராவர்.

(அ) உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆளொருவராக உள்ளவரான ;

2-PL 007294 - 175 (2013/06)

(ஆ) 2009 ஆம் ஆண்டு முடிவடைகின்றவரையான ஏதேனும் ஆண்டுக்கு வட மாகாணத்திலுள்ள அல்லது கிழக்கு மாகாணத்திலுள்ள ஏதேனும் தேர்தல் மாவட்டத்துக் கான தேருநர்கள் இடாப்பில் அவரது பெயர் காணப் படுகின்றவரான ; அத்துடன்

(இ) 2009 ஆம் ஆண்டின் பின்னரான நடைமுறையிலுள்ள ஏதேனும் இடாப்பில் அவரது பெயர் பதிவுசெய்யப்பட் டிராதவரான,

எவரேனும் இலங்கைப் பிரசையும், (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் பற்றி எண்பிப்பதன் மீதும், அவர் உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆளொருவராக வுள்ளாரென்ற பயன்பட அவர் தற்போது வதிகின்ற இடப்பரப்பின் கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் காண்பிப்பதன்மீதும், 2009, மே 18 ஆந் தேதிக்கு முன்னர் அவர் எந்தத் தேர்தல் மாவட்டத்தினுள் நிரந்தரமாக வதிவுள்ளவராக விருந்தாரோ அத்தகைய தேர்தல் மாவட்டத்தின் தேருநர்கள் இடாப்பில் பதிவுசெய்யப்படுவதற்கு 2009, மே 18 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் பதிவு அலுவலருக்கு விண்ணப்பிப் பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விண்ணப்ப மானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தல்மூலம் தேர்தல் ஆணையாளர்மூலம் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்குமுன்னர் செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும் அவ்வுட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட உரித்தானது (1) ஆம் உட் பிரிவின் குறிப்பீடுசெய்யப்பட்ட பிரசையொருவரின் பிள்ளை களுக்கு -

(அ) அத்தகைய பிரசை உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆளாக வந்த தேதியன்று பதினெட்டு வயதை எய்தியிராதவர் களும் ;

(ஆ) அத்தகைய பிரசை உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆளாக வந்த பின்னர் பிறந்தவரும் மற்றும் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று பதினெட்டு வயதை அல்லது அதற்கு மேற்பட்ட வயதை எய்தியுள்ளவர்களும்,

(இ) 2009 ஆம் ஆண்டின் பின்னரான நடைமுறையிலுள்ள ஏதேனும் இடாப்பில் அவரது பெயர் பதிவுசெய்யப்பட்டிராதவராகவுள்ளவிடத்து,

மேலேயுள்ள (அ) அல்லது (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் எண்பிப்பானது பதிவுசெய்வதற்கு நாடப்பட்ட அத்தகைய பிள்ளையின் பிறப்புச் சான்றிதழையும் மற்றும் அவர் தற்போது வதிகின்ற இடப்பரப்பின் கிராமசேவகரினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றினையும் சமர்ப்பிப்பதன்மீது விசாலிக்கப்படுதல் வேண்டும்.

உரிமைக் கோரிக்கைகள் பற்றிய நிரல்.

**3.** (1) பதிவு அலுவலர், 2 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள் பற்றிய நிரலொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய நிரல் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதென்றும், பதிவு அலுவலரின் அலுவலகத்தில் நாளின் நியாயமான எல்லா நேரங்களிலும் அது பார்வையிடுவதற்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ளதென்றும், வர்த்தமானியிலும் மற்றும் சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் மொழி ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது ஒரு செய்தித்தாளிலும் அறிவித்தல் கொடுத்தலும் வேண்டும்.

(2) (அ) வட மாகாணத்திலுள்ள அல்லது கிழக்கு மாகாணத்திலுள்ள ஏதேனும் தேர்தல் மாவட்டத்திற்கான ஏதேனும் தேருநர்கள் இடாப்பில் பதிவுசெய்யப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளவரும், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட நிரலில் அவரது பெயர் காணப்படாதிருப்பவருமான எவரேனுமாள், வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்டதிலிருந்து ஒரு வாரத்தினுள் பதிவு அலுவலருக்கு எழுத்தில் மேன்முறையீடு செய்யலாம்.

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் உட்பிரிவு (8) முதல் (16) வரையிலான உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், பதிவு அலுவலரின் முடிபுகளுக்கெதிரான மேன்முறையீடுகளுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(இ) அத்தகைய மேன்முறையீட்டின் மீதும் விசாரணையின் மீதும், பதிவு அலுவலர், 4 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட குறைநிரப்பு இடாப்பில் அத்தகைய மேன்முறையீட்டாளரின் பெயரைச் சேர்க்காது விடுவதற்கு முடிவு செய்தால், இன்னலுற்ற மேன்முறையீட்டாளர், பதிவு அலுவலரின் முடிபிலிருந்து ஒரு வாரத்தினுள் மீளாய்வு அலுவலருக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் உட்பிரிவு (2) முதல் (5) வரையிலான உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், ஏற்புடையனவாதலும் வேண்டும்.

குறைநிரப்பு இடாப்பு.

**4**. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலர், விசாரணை மற்றும் தீர்ப்பு ஏதேனுமிருப்பின், அதற்குப் பின்னர் (3) ஆம் பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட நிரலில் எவ்வாட்களின் பெயர்கள் காணப்படுகின்றனவோ அவ்வாட்களின் பெயர்களைக் கொண்டுள்ளதும் மற்றும் அப்பிரிவின் நியதிகளின்படி இறுதியாக்கப்பட்டதுமான குறைநிரப்பு இடாப்பொன்றைத் தயாரித்தலும் அத்தாட்சிப்படுத்துதலும் வேண்டும் :

ஆயின், பதிவு அலுவலர், மீளாய்வு அலுவலருக்கான மேன்முறையீடொன்று முடிவுறாதிருக்கும்போது குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்தலாம் என்பதுடன், அதன்பின்னர் அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக்கப்பட்டதன்மேல் மீளாய்வு அலுவலரின் முடிபுக்கிணங்க எவரேனுமாளின் பெயரை அத்தகைய இடாப்பில் பதிதலும் அல்லது அதிலிருந்து நீக்கிவிடுதலும் வேண்டும்.

தவறுகள்.

**5**. (1) குறைநிரப்பு இடாப்பில் எவ்வாளின் பெயர் காணப்படுகின்றதோ அவ்வாள் எவரும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இடாப்புக்களில் அவரது பெயரைப் பதிந்து கொள்வதற்கு அவர் தகைமையுடையவராகவிருக்கலாம் என்பது எவ்வாறிருப்பினும், வேறேதேனும் தேருநர்கள் இடாப்பில் அவரது பெயரைப் பதிந்து கொள்வதற்கு அவர் உரித்துடையவராதலாகாது.

(2) ஆளெவரும், அவரது பெயரை அதே இடாப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் பதிந்து கொள்வதற்கு உரித்துடைய வராக்கப்படுதல் வேண்டுமென்பது எவ்வாறிருப்பினும், அவ்வாறு பதிந்து கொள்வதற்கு அல்லது தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எவ்வாளின் பெயர் குறைநிரப்பு இடாப்பில் காணப்படுகின்றதோ அவ்வாளின் பெயர் வேறேதேனும் தேருநர்கள் இடாப்பிலும் காணப்பட்டும் அத்துடன் அவ்வாள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேர்தல் மாவட்டங்களில் தமது வாக்கைப் பயன்படுத்தினால், அவர் தவறொன்றிற்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இரண்டாண்டுகளுக்கு விஞ்சாத காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) இச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நோக்கத்துக்காக போலியான தகவலை அல்லது பொய்யான ஆவணங்களைச் சமர்ப்பிக்கின்ற 2 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் எவரேனுமாள், தவறொன்றிக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஓராண்டை விஞ்சாத மறியற்றண்டனைக்கு அல்லது ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

சட்டத்தின் நடைமுறைக் காலப்பகுதியும் அதன் நீடிப்பும்.

**6.** (1) இச்சட்டம் அதன் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து தொடங்குகின்ற இரண்டாண்டு காலப்பகுதியொன்றுக்கு நடைமுறையிலிருத்தல் வேண்டும்.

(2) அமைச்சர் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் ஒரு மாதத்திற்குட்பட்ட ஏதேனும் நேரத்தில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையினால் இச்சட்டத்தின் மேலதிக செயற்பாட்டை மேலும் ஒரு காலப்பகுதிக்கு நீடிக்கலாம். ஆயின், எவ்வாறாயினும் ஏதேனும் அத்தகைய நீடிப்பின் கூட்டுமொத்த காலப்பகுதி அவ்வாறு அளிக்கப்பட்ட ஏதேனும் நீடிப்பின் தேதிலிருந்து இரண்டு ஆண்டுகளை விஞ்சுதலாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை, அமைச்சரின் கையெழுத்து அதில் பொறிக்கப்படும்போது நடைமுறையிலிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கட்டளை ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் அத்தகைய கட்டளை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்படுதல் வேண்டும்.

(5) கட்டளை எத்தேதியில் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதோ அத்தேதியைப் பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள்கோடல்.

**8**. இச்சட்டத்தில் -

“தேர்தல்கள் ஆணையாளர்” என்பது, 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது;

“உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆள்” என்பது, வட மாகாணத்தில் அல்லது கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கின்றவரும் இலங்கையில் இடம்பெற்ற ஆயுதந்தாங்கிய மோதலின் விளைவாக 2009, மே 18 ஆந் தேதிக்கு முன்னரான எந்நேரத்திலும் தமது வதிவிடத்திலிருந்து செல்வதற்கு வலுக்கட்டாயப்படுத்தப்பட்டவரும் அல்லது கடப்பாட்டுக்குட்படுத்தப்பட்டவரும், வட மாகாணத்தில் அல்லது கிழக்கு மாகாணத்தில் தமது தொடக்க வதிவிடத்துக்கு வெளியே இலங்கையில் தற்போது வதிகின்றவருமான ஒரு இலங்கைப் பிரசை என்று பொருளாகும் ;

"பதிவு அலுவலர்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது ;

"நடைமுறையிலுள்ள இடாப்பு" என்பது, 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது ;

"மீளாய்வு அலுவலர்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளது.

### அரசியலமைப்பின் 122 ஆம் உறுப்புரையின் கீழான புறக்குறிப்பு

மேலேயுள்ள சட்டமூலமானது அமைச்சரவையின் கருத்துப்படி தேசிய நலன் கருதி அவசரமானதாகவுள்ளதென இத்தால் அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது.

**எஸ். அபேசிங்க,**

*அமைச்சரவைச் செயலாளர்*

*2013, மே மாதம் 26 ஆந் திகதி.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 :* (வெளிநாடு) *ரூபா 1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் *மாதம் 15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான *சந்தாப்பணம் அத்தியட்சகர்,* அரசாங்க வெளியீட்டலுவலகம், *அரசாங்க தகவல் திணைக்களம்,* இல. *163,* கிருலபனை *மாவத்தை,* பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்